GCPP.—109/11—5,000 Cps. (486)—9-3-2016.

# இந்திய தேர்தல் ஆணையம்
## நிர்வாச்சன் சதன், அசோக ரோடு, புதுதில்லி-110 001.

எண்509/11/2004-JS-I 03/02/2016

**உத்தரவு**

பொருள்: மாண்புமிகு டில்லி உயர்நீதிமன்றத்தின் W.P.(C) எண் - 4912/1998 (கிரிஸக் பாரத் எதிர் இந்திய யூனியன் மற்றும் ஏனையோர்)ல் உள்ள தீர்ப்பு – மின்சாரம், தண்ணீர் மற்றும் தொலைபேசி வசதி வழங்கும் நிறுவனங்களிலிருந்து பெறும் தேவை மறுப்பு சான்றிதழ்-ஐ வேடபாளர்கள் தங்களுடைய வேட்புமனுக்களுடன் சமர்ப்பித்தல் - தொடர்பாக.

*****

மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் 13.03.2003 தேதியிட்ட CA ( C) எண் 490, 2002 ல் உள்ள தீர்ப்பின் தொடர்ச்சியாக தன்னுடைய உத்தரவு எண் 3/ER/2003/JS.11 நாள் 27.03.2003ன் வழி ஆணையம் மக்களைவை மற்றும் மாநில சட்டசபைத் தேர்தல்களுக்கு வேட்புமனுக்கள் தாக்கல் செய்யும் வேட்பாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளதின்படி அவர்கள் தங்களின் குற்றவியல் நிகழ்வுகள் ஏதாவது இருந்தாலும், சொத்துக்கள், கடன்கள் மற்றும் கல்வித் தகுதிகள் பற்றியும் உறுதிமொழி வாக்குமூலத்திற்கான வடிவத்தையும் குறிப்பிட்டுள்ளதுஇ ஆகையால், மேலும் இந்த வடிவத்தில்இ வேட்பாளர்கள் ஏதாவது பொது அலுவல் பணியில் இருந்தாலோ இருக்கப் பெறடிருந்தாலோ, அரசு சார்ந்த நிலுவை தொகை தொடர்பாக நிலுகை இல்லை சான்றிதழ் (No Due Certificate) -2ம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகையால், மேலும் நிலுவை இல்லைச் சான்றிதழ் பெறுவதிலுள்ள சிரமங்கள் தொடர்பாக சிலரிடமிருந்துப் பெற்ற முறையீடுகளைக் கருத்தில் கொண்டு ஆணையம் நிலுவை இல்லை சான்றிதழ் தேவையை நிறுத்திவிட முடிவுசெய்துள்ளது. இது அதனுடைய கடிதம் எண் 3/ER/2004/JS.11 நாள் 09.03.2004 வழியாக தொடர்புடைய அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகையால், மேலும்,

மாண்புமிகு டெல்லி உயர்நீதிமன்றம் தன்னுடைய 07.08.2015 தேதியிட்ட W.P ( C) எண் 4912/1998 (கிரிஸக் பாரத் எதிர் இந்திய யூனியன் மற்றும் ஏனையோர்) தீர்ப்பில் இவற்றிற்கு இடையில் கீழ்கண்டவாறு உத்தரவிட்டுள்ளது.

இந்த மனுவில் முந்கைய ஆணைகளில் உத்திரவிட்டது போல, இந்திய தேர்தல் ஆணையம் மக்களவை அல்லது சட்டசபைக்கு போட்டியிட விருப்பம் உள்ள வேட்பாளர்கள், தங்களுடைய வேட்புமனுவுடன் தங்களுக்கு பொது நிலுவை எதுவும் பாக்கியில்லை என உறுதிமொழி வாக்குமூலம் அளிக்கவேண்டும். மேலும் அந்த ஏதாவது அரசு தங்குமிடங்களில் குடியிருக்கப் பெற்றிருந்தால் அவர்கள் “தங்கள் குடியிருப்புக்கு மின்சாரம், தண்ணீர், தொலைப்பேசி தரும் அமைப்புகளிடம் இருந்து “நிலுவை இல்லைச் சான்றிதழ்” பெற்று அளிக்க வேண்டும்.

ஆகையால் இப்பொழுது மாண்புமிகு டெல்லி உயர்நீதிமன்றத்தின் மேலே கண்ட உத்தரவைத் தொடர்ந்து ஆணையம் இங்கே உத்தரவிடுவது என்னவெனில், மக்களவை மற்றும் மாநில சட்டசபை தேர்தலுக்கு, ஒவ்வொரு வேட்பாளரும் வேட்புமனு தாக்கல் செய்யும் போது, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வடிவத்தில் கூடுதல் உறுதிமொழி வாக்குமூலம் ஒன்றை தேவை மறுப்புச்சான்றிதழ் ஒன்றை மின்சாரம், தண்ணீர், தொலைப்பேசி வசதி தரும் அமைப்புளிடமிருந்தும் மேலும் ஏதாவது அரசு குடியிருப்பில் கடந்த பத்து ஆண்டுகளில் குடியிருந்திருந்தாலும் அளிக்க வேண்டும்.

இந்த உறுதிமொழி வாக்குமூலம் படிவம்-26ல் நிரப்பப்பட வேண்டிய உறுதிமொழி வாக்குமூலத்தை தவிர்த்து கூடுதலாக இருக்கும். மேலும் இது பிராமண ஆணையார் அல்லது சான்றுதி அலுவலர் அல்லது முதல்நிலை மாஜிஸ்ட்ரேட்-ஆல் சான்றிடப்படவேண்டும். இது வேட்புமனு தாக்கல் செய்ய உள்ள இறுதி நாளன்று மாலை 3.00 மணிக்குள் தாக்கல் செய்யப்பட வேண்டும். இந்த உறுதிமொழி வாக்குமூலத்தை “தேவை மறுப்புச் சான்றிதழுடன்” தாக்கல் செய்ய தவறினால் இந்திய பிரதிநிதித்துவ சட்டம், 1951ன் பிரிவு 36ன் தேவை அடிப்படையில் முக்கியக்குறை எனக்கருதப்படும்.

ஆணையின் உத்தரவுப்படி

(அனுஜ் ஜெய்பூரியார்)
செயலாளர்

<u>பின்னிணைப்பு</u>

## வேட்பாளரால் சமர்பிக்கப்பட வேண்டிய கூடுதல் உறுதிமொழி வாக்குமூலம்

…………………………………………………..க்கான தேர்தல் (சபையின் பெயர்)

……………………………………………………………………. தொகுதியிலிருந்து

நான் ……………………………………………………… (வேட்பாளாரின் பெயர்)

………………………………………………………………….ன் மகன்/மகள்/மனைவி

மேற்கண்ட தேர்தலுக்கான வேட்பாளர் மனப்பூர்வமாக அளிக்கும் பிரமாணம் கீழ்கண்டவாறு:

(i) தற்போதய தேர்தல் அறிவிக்கபட்ட நாளுக்கு முந்தய பத்து ஆண்டு காலத்தில் எனக்கு எந்தவித அரசு குடியிருப்பும் வழங்கப்படவில்லை.

*அல்லது*

(ii) தற்போதய தேர்தல் அறிவிக்கபட்ட நாளுக்கு முந்தய பத்து ஆண்டுகளில் எனக்கு…………………………………………………………………… ……………………………………………………………………………… இடத்தில் (குடியிருப்பு விலாசத்தை குறிக்கவும்) குடியிருப்பு அளிக்கப்பட்டது. மேலும், நான் குடியிருப்பிற்காக செலுத்த வேண்டிய வாடகை பாக்கி எதுவும் நிலுவையில் இல்லை *அல்லது* அந்த குடியிருபிற்கான மின்சாரம், தண்ணீர், தொலைபேசி வசதி தரும் அமைப்புகளுக்கு எந்தவிதமான பாக்கித்தொகையும் ……………………… அன்றைய தேதி *(இந்த தேதி தேர்தல் அறிவிக்கப்பட்ட மாதத்திற்கு முந்தைய 3வது மாதத்தின் கடைசி நாளாக இருக்க வேண்டும்)* வரை இல்லை.

(iii) சம்பந்தப்பட்ட அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட "நிலுவை இல்லாச் சான்றிதழ்" இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

<u>சரிபார்ப்பு:</u>

மேலே பெயரிடப்பட்ட ஆணைச்சான்றுரையர் (deponent) ஆகிய நான் மேலே உள்ள வாக்குமூலத்தை சரிபார்த்து என்னுடைய அறிவிற்கு எட்டியவரை அவை சரியானவை என்றும் அதன் எந்த ஒரு பகுதியும் தவறானது இல்லை என்றும் உறுதி அளிக்கின்றேன்.

இது ………………………இங்கு …………….. மாதத்தின் ………………தேதி அன்று சரிபார்கப்பட்டது.

**ஆணைச்சான்றுரையர்**